# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 82 of 2022 | **CNR No.** | **:** | TNKI13-000085-2022 |
| **Name** | **:** | கல்பனா | **Husband Name** | **:** | சரவணன் |
| **Witness for** | **:** | Defendant | **Calling** | **:** | DW1 |
| **Age** | **:** | 46 | **Village** | **:** | சின்னகவுண்டனூர் |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 11.00 AM | **End Time** | **:** | 12.05 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 07.04.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) வாதி யார் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என் பெயரிலும் எனது கணவருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் எனக்காகவும் எனது கணவருக்காகவும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேனா என்றால் ஆமாம். எனது கணவர் ஊரும் எனது அம்மா ஊரும் சின்னகவுண்டனூர் என்றால் சரிதான். வாதியை எனக்கு சிறு வயதிலிருந்தே தெரியும் என்றால் சரிதான். வாதி சின்னகவுண்டனூரில் தான் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது கணவர் வீட்டிற்கு எந்த திசையில் வாதியின் வீடு உள்ளது என்றால் தெற்கு புறம் உள்ளது. தற்போதும் வாதி அந்த தெற்கு புறம் உள்ள வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அது என்ன வீடு என்றால் ஓட்டு வீடு ஆகும். யார் யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சின்னசாமியும் அவரது மனைவியும் இருந்து வருகிறார்கள். வாதி

குடியிருக்கும் வீடு உள்ள நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த நிலத்தின் பரப்பளவு தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டிற்கும் வாதி வீட்டிற்கும் நடுவில் வேறு எதாவது வீடு உள்ளதா என்றால் இல்லை, எங்களுக்கு சொந்தமான காலியிடம் தான் உள்ளது. காலியிடம் எனக்கு சொந்தமானது என காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை, அந்த இடம் எனக்கு சொந்தமானது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி ராஜிகிருஷ்ணனிடமிருந்து கிரையம் வாங்கியதாக சொல்லும் நிலத்தில் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, எனது கணவர் பெயரில் தான் வாங்கப்பட்டது. அந்த நிலமானது எனது பெயரில் வாங்கவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் நான் வாங்கியது போல் இருந்தால் அது தவறு என்றால் சரிதான், எனது கணவர் பெயரில் வாங்கினோம். அந்த சொத்தானது ராஜிகிருஷ்ணனுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவரது பூர்வீக சொத்தாகும், அவரது அப்பா பெயரில் இருந்து அவர் பெயருக்கு பட்டா மாற்றி, பின்பு கிரையம் கொடுத்தார். தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் சின்னகவுண்டனூரில் தற்போது தார்சு வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனது வீட்டில் எத்தனை அறைகள் உள்ளது என்றால் 13 அறைகள் உள்ள இரண்டுமாடி குடியிருப்பு ஆகும். எனது பிரமாண பத்திரத்தில் ஓட்டு வீட்டில் குடியிருந்து வருவதாக சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரியல்ல, ஓட்டு வீட்டில் தான் குடியிருந்தோம், தற்போது ஒரு மாதமாக தான் தார்சு வீட்டில் குடியிருந்து

வருகிறோம். எது பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு ஓட்டு வீட்டிலிருந்து தார்சு வீட்டிற்கு மாறியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். எனது எதிர் வழக்குரையில் 1–ம் வாதி கிரையம் பெற்ற சொத்திற்கு வடக்கு திசையில் சர்வே எண். 84/2, **சர்வே எண். 84/4** ஆகிய சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது, அது என்ன சொத்துக்கள் என்றால் எனக்கு தெரியாது, எனது கணவருக்குதான் தெரியும். எனக்கு சரியாக புரியவில்லை. **கிழக்கில் சர்வே எண். 84/7, மேற்கே சர்வே எண். 38/1ஏ, தெற்கே சர்வே எண். 38/5** சொத்துக்கள் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அவைகள் யார் பெயரில் உள்ளது, என்னவாக உள்ளது என்றால் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. நாங்கள் குடியிருந்து வரும் இடத்தின் விஸ்த்தீர்ணம் என்னவென்றால் சுமார் **3 – 3 1/2 சென்ட்** ஆகும். அது எனது மாமனாருக்கு பாத்தியப்பட்டதா என்றால் இல்லை, எனது கணவர் ராஜிகிருஷ்ணனிடமிருந்து வாங்கிய சொத்தாகும். வாதி குடியிருக்கும் இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, சிறிது தூரமாக உள்ளது. எனது கணவர் எந்த தேதியில் கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது, பத்திரத்தை பார்க்க வேண்டும். 1–ம் பிரதிவாதி ராஜிகிருஷ்ணனிடமிருந்து கிரையம் வாங்குவதற்கு முன்பு அளந்து பார்த்து வாங்கினோமா என்றால் இல்லை. கிரையம் வாங்கிய பிறகு அளந்து பார்த்தோமா என்றால் இல்லை. அதற்குள் வாதி வழக்கு தாக்கல் செய்துவிட்டார். அதனால் அளக்கவில்லை. வழக்கு சொத்தில் சேர்த்து மோசடியாக கிரையம் வாங்கிவிட்டோம் அதனால்தான் இன்றைய தேதி வரை அளக்கவில்லை என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டிற்கு

எந்த வழியில் செல்கிறோம் என்றால் வாதியின் வீட்டிற்கு மேற்கு புறத்தில் உள்ள காலி இடத்தின் வழியாகதான் செல்கிறோம். அதன் அளவுகள் என்னவென்றால் சுமார் 7 அடி அகலம் இருக்கும், சுமார் 30 அடி நீளமாக டேம் தண்ணீர் செல்கிற கால்வாய் வரை உள்ளது. அது எங்களுக்கு உண்டான வழி என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எங்களது கிரைய பத்திரத்தில் உள்ளது. மேற்சொன்ன வழி குறித்த விவரங்கள் எங்களது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் குறிப்பிட்டுள்ளோம். எதிர்வழக்குரை காட்டப்பட்ட, எந்த இடத்தில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளோம் என்றால் சாட்சி படித்து பார்த்துவிட்டு குறிப்பிட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார். நான் சொல்வது போல் குறிப்பிடவில்லை என்று வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது. நான் சொல்லும் சொல்லும் பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். நான் சொல்வது போல் எந்த பத்திரமும் தாக்கல் செய்யவில்லை என்றும் உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதால் பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி பெயரில் 1989-ல் பட்டா ஏற்பட்டு கூரை வீட்டில் முதலில் இருந்து தற்போது ஓட்டுவீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் பட்டா பெற்றது வேறு இடம் ஆகும். தற்போது நாங்கள் குடியிருந்து வரும் இடத்திற்கு அருகில் வீடு கட்டி அராஜகம் செய்து வருகிறார். பட்டா பெற்றது வேறு இடம் என்று சொல்லும் நிலையில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி எத்தனை வருடங்களாக ஓட்டுவீடு கட்டி இருந்து வருகிறார் என்றால் சுமார் 15 - 20 வருடங்கள் இருக்கும். அவ்வாறு

இருப்பதாக சொல்லும் நிலையில் அவருக்கு எதிராக நாங்கள் எதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் எனக்கு தெரியாது. எனது கணவருக்குதான் தெரியும். வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று நினைக்கிறேன், வழக்கு எண் எனது கணவருக்கு தான் தெரியும். நான் எதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எனது கணவர் தான் தாக்கல் செய்துள்ளார், அவர் தாக்கல் செய்ததின் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நாங்கள் அவ்வாறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யாததால் வாதிக்கு ஆதரவாக தீர்வாகவேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் மோசடியான முறையில் கிரையம் வாங்கியுள்ளோம் என்றும் அதனால்தான் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் செக்குபந்திகளாக சர்வே எண்கள் மட்டும் குறிப்பிட்டுள்ள நிலையில் அதன் விவரங்கள் மட்டும் உரிமையாளர்கள் பெயரில் மறைத்துள்ளோம் என்றும் விவரங்கள் சொல்லியிருந்தால் உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதால் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கிரைய பத்திரத்தின் அடிப்படையில் வருவாய்துறை ஆவணங்கள் ஏற்படவில்லை என்றும் அதனால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏற்பட்டுள்ளது. உண்மையில் கிரையம் வாங்கியிருந்தால் வருவாய்துறை ஆவணங்கள் ஏற்பட்டிருக்கும் என்றும் பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரம் என்றால் சரியல்ல. கிரையம் வாங்கிய சொத்தில் நாங்கள் ஒருநாளும் அனுபவத்தில் இல்லை என்றும் அதனால்தான் அனுபவச் சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு வாதி பெயரில் பட்டா ஏற்பட்டு வாதி வெளியூரில் இருந்து வந்த சமயத்தில் மோசடியாக ராஜிகிருஷ்ணன் பெயரில் வருவாய் துறை ஆவணங்களை ஏற்படுத்தி மோசடியாக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. உண்மையில் ராஜிகிருஷ்ணன் பெயரில் ஆவணங்கள் இருந்திருந்தால் கிரையம் வாங்கும் பொழுது வாங்கியிருப்போம் என்றும் அவற்றை தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. ஆவணங்கள் உள்ளது. வழக்கு சொத்தில் வாதி தான் குடும்பத்துடன் இன்றளவும் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி என்ன வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் ஓட்டுவீட்டில் குடியிருந்து வருகிறார். அவர் வீட்டின் செக்குபந்தி விவரம் தெரியுமா என்றால் தெற்கே கால்வாய், வடக்கில் எங்கள் வீடு, மேற்கில் கால்வாயுடைய காலி இடம், கிழக்கில் வேறு ஒரு சின்னசாமியின் தார்சு வீடு ஆகும். வாதி மேற்படி வீட்டில் எத்தனை காலமாக இருந்து வருகிறார் என்றால் 10 வருடமாக குடியிருந்து வருகிறார். நான் உண்மை சங்கதிகளை மறைத்து முன்னுக்குபின் முரணாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வாதிக்கு ஆதரவாக வழக்கு செலவுத்தொகையுடன் தீர்வாக வேண்டும் என்றால் சரியல்ல.

(2) **குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

AMAR ANAND
District Munsif
Digitally signed by AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai